(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 64.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

**2025 ஜூன் 30, திங்கட்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025 ஜூலை 08 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — குழு ஆய்நிலை.

*4.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**